செய்தி வெளியீடு எண்: 009 நாள்: 04.01.2019

<u>பொது (தேர்தல்கள்–1)த் துறை</u>

# செய்தி வெளியீடு

இந்தியத்தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக் கிணங்க 01.01.2019–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு, தீவிர முறையிலான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெயர், சேர்த்தல், நீக்கல், திருத்தல் முதலியவற்றுக்கான படிவங்கள் 01–09–2018 முதல் 31–10–2018 வரை பெறப்பட்டன.

2. முன்பு அறிவித்த அட்டவணையின்படி, இறுதி வாக்காளர் பட்டியல்கள் 04–01–2019 அன்று வெளியிடப்பட்டிருக்க வேண்டும். புயல் பாதித்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கைகளுக்கு மேலும் சிறிது அவகாசம் வேண்டினர். இதர மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கைகளுக்கு மேலும் அவகாசம் வேண்டியதால், இந்திய தேர்தல் ஆணையம் இறுதி வாக்காளர் பட்டியல்களை 21–01–2019 அன்று வெளியிட அனுமதித்துள்ளது. இடைத்தேர்தல் அளிவிக்கப்பட்டுள்ள 168–திருவாரூர் சட்டமன்றத் தொகுதியைத் தவிர மற்ற அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் 21.01.2019 அன்று இறுதி வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்படும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**